செ.வெ.எண்.249 நாள்.06.09.2019

செய்தி வெளியீடு

**காஞ்சிபுரம் பள்ளிக்கல்வித்துறை சார்பில் நீர் மேலாண்மை இயக்கம் ஜல்சக்தி அபியான், நீர் பாதுகாப்பு மற்றும் மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.**

காஞ்சிபுரம் மாவட்டம், பள்ளிக்கல்வித்துறை சார்பில் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நீர் மேலாண்மை இயக்கம் ஜல்சக்தி அபியான் (JSA) நீர் பாதுகாப்பு மற்றும் மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு உறுதி மொழியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் பள்ளி மாணாக்கர்கள் ஏற்றனர். பின்னர் நீர் மேலாண்மை இயக்கம் ஜல்சக்தி அபியான் (JSA) நீர் பாதுகாப்பு மற்றும் மழைநீர் சேகரிப்பு பற்றி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது,

நீர் ஆதாரங்களை பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கத்தில், நீர் மேலாண்மை இயக்கம் ஜல் சக்தி அபியான் இயக்கம் அகில இந்தியா அளவில் தொடங்கப்பட்டு உள்ளது. காஞ்சிபுரம் மாவட்டத்தில் பொதுப்பணித்துறை கீழ் 924 ஏரிகள்உள்ளன. அதுமட்டுமல்லாமல் 968 ஏரிகள் ஊராட்சிகளின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது. 3,500த்திற்கும் மேற்பட்ட குட்டைகள், குளங்கள் சிறு பாசன அமைப்புகளாக செயல்படுகிறது. நமது மாவட்டத்தில் நீரை சேமித்து வைக்க அதிகளவு நீர்நிலைகளை நமது முன்னோர்கள் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்கள். அந்த நீர்வள ஆதார அமைப்புகளை நாம் முழுமையாக பாதுகாக்கவும், சீரமைக்கவும் வேண்டும். வருகின்ற மழைநீரை சேகரித்து நிலத்தின் நீர் வள ஆதாரத்தை பெருக்கி நிலத்தடி நீர்வள ஆதாரங்களையும் பாதுகாக்க வேண்டியது நமது கடமையாகும். பொதுமக்கள் அனைவரும் வீடுகளின் முன்பு மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைத்து மழைநீரை சேகரித்து குடிநீர் தேவைகளுக்கும், கால்நடைகளுக்கும், நீர்பாசன மற்றும் நீர்மட்டத்தை உயர்த்துவதற்கும் ஒத்துழைப்பை நல்க வேண்டும். எதிர்காலத்தில் தண்ணீரின் முக்கியத்துவத்தை உணர்ந்து இளைய தலைமுறையினராகிய நீங்கள் மரங்களை நட்டு, மண்வளம் காத்து மழையைப் பெற்று வளம் பெறவும், நீர் மாசுபடாமல் பாதுகாத்து நிலத்தடி நீர்மட்டதை உயர்த்த வேண்டும். மழைநீரை சேகரிப்பு பற்றி அறிந்துக்கொண்டு பொதுமக்களுக்கு விழிப்புணர்வை உண்டாக்க வேண்டும் என தெரிவித்தார்.

பின்னர் பள்ளிக்கல்வித்துறை சார்பில் ஜல்சக்தி அபியான், நீர் பாதுகாப்பு மற்றும் மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திலிருந்து கொடியசைத்து தொடங்கி வைத்தார். இப்பேரணியானது மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திலிருந்து மேட்டு தெரு, கரிக்கினில் அமர்ந்த கோயில் தெரு வழியாக மீண்டும் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தை அடைந்தன. இவ்விழிப்புணர்வு பேரணியில் காஞ்சிபுரத்திலுள்ள எஸ்.எஸ்.கே.வி.மகளிர் மேல்நிலைப்பள்ளி, எஸ்.எஸ்.கே.வி.மெட்ரிக் பெண்கள்/ஆண்கள் மேல்நிலைப்பள்ளிகள், ஸ்ரீ நாராயண குரு மேல்நிலைப்பள்ளி, சோழன் மேல்நிலைப்பள்ளி,மாமல்லன் மேல்நிலைப்பள்ளி, பாரதிதாசன் மேல்நிலைப்பள்ளி,இன்பெண்ட் ஜிசஸ் மேல்நிலைப்பள்ளி, சுவாமி விவேகானந்தா மேல்நிலைப்பள்ளி,

காஞ்சி குளோபல் மேல்நிலைப்பள்ளி, ராயல் மேல்நிலைப்பள்ளி, கத்தரி மெட்ரிக் பள்ளி, அந்திரசன் மேல்நிலைப்பள்ளி, பச்சையப்பன் மேல்நிலைப்பள்ளி, அரசு கா.மு.சு.மேல்நிலைப்பள்ளி, ஸ்ரீ தண்டபாணி ஓரியண்டல் மேல்நிலைப்பள்ளி, பெரிய காஞ்சிபுரம் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, சின்ன காஞ்சிபுரம் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, மாவட்ட ஆட்சியர் காலனி உயர்நிலைப்பள்ளி, பிள்ளையார் பாளையம் சி.எஸ்.எம்.நகராட்சி மேல்நிலைப்பள்ளி, காஞ்சிபுரம் கல்வி மாவட்ட NSS மாணவர்கள் சி.பி.எஸ்.இ (CBSE) பள்ளி மாணாக்கர்கள், என **5,350**த்திற்கும் மேற்பட்ட பள்ளி மாணவ/மாணவியர்கள் ஜல்சக்தி அபியான் (JSA) நீர்பாதுகாப்பு மற்றும் மழைநீர் சேகரிப்பு பற்றி விழிப்புணர்வு பதாகைகளை கையில் ஏந்தியும், துண்டு பிரசுரங்களை வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.ட்டி.ஸ்ரீதர், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு.ஆஞ்சலோ இருதயசாமி, மாவட்ட கல்வி அலுவலர் திருமதி.மகேஸ்வரி, மாவட்ட விளையாட்டு நல அலுவலர் திரு.சுப்பிரமணியன், இந்தியன் ஆயில் கார்ப்ரேஷன் நிறுவனம் சார்பில், மேசை பந்து வீராங்களை செல்வி. M.S.K.ஷாமினி , கேரம் விளையாட்டு வீராங்களை செல்வி.பரிமளா தேவி, கேரம் விளையாட்டு வீரர் திரு.ரமேஷ்பாபு, டென்னீஸ் வீராங்களை செல்வி.ருஷ்மி சக்கரவர்த்தி ஆகியோர் சிறப்பு விருத்தினராக கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.